# நாஞ்சில் மலர்
NANCHIL MALAR

மலர் : 10 இதழ் : 6 நாஞ்சில் மலர் ஏப்ரல் 2020

VOLUME : 10 ISSUE: 6 NANCHIL MALAR APRIL 2020

விலை : ₹20/-வருடச் சந்தா: ₹.200/- Annual Subscription ₹ 200/-


## வாழ்த்துகிறோம்!



தமிழக முதல்வர்

மாண்புமிகு எடப்பாடி திரு K பழனிசாமி அவர்களைப்

பாராட்டி வாழ்த்துகிறோம்!

# வாழ்த்துகிறோம்!





'ரம்யம் கற்றல் கலைக் கழகம்'' என்ற பயிற்சி மையத்தை சென்னை ராமாவரம், நெசப்பாக்கம், கோத்தாரி நகர் ஆகிய இடங்களில் தொடங்கி வெற்றிகரமாக நடத்திவரும் ரம்யா அசோக் தம்பதியினர், ஆசிரியைகள் மற்றும் மாணவர்கள்.

இங்கு மாணவர்களுக்கு தரமானகல்வி மற்றும் தனித்திறன் பயிற்சிகளை வழங்கி வருகிறாகள்!.

# நாஞ்சில் மலர்

மலர் : 10 இதழ் : 6 ஏப்ரல் 2020

VOLUME : 10 ISSUE : 6 NANCHIL MALAR APRIL 2020

*******************************************************

பதிப்பாசிரியர்: : கி. தானப்பன்

ஆசிரியர் : கி. கண்ணன் துணையாசிரியர்: மு. கோபி

இதழ் வடிவமைப்பு மற்றும் அச்சிடுபவர் : ப.இளங்கோ

---

ஆசிரியர் குழு: பெ .சாஸ்தாங்குட்டி பிள்ளை, என்.பொன்னுசுவாமி ,
' நாஞ்சில் கொண்டான்' எஸ். சரவணன், முனைவர். சி. உதயகுமார்,
P. வேலப்பன்,

---

ஒருங்கிணைப்பாளர்கள்: ம. மகராஜபிள்ளை, தியாகி. தெ. வே. பகவதிப் பெருமாள் ,
சுந்தர் சுப்பிரமணியம், எஸ். கிருஷ்ண பிள்ளை

---

ஆலோசகர்கள் : பி . யோகீசுவரன், மோகன் காந்திராமன்

நிர்வாக இயக்குனர் : A. பூதலிங்கம் பிள்ளை,

*******************************************************

நாஞ்சில் மலருக்கு சந்தா அனுப்ப விரும்புபவர்கள் காசோலை அல்லது வரைவோலையில் 'Nanchil Malar' எனக் குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்! வருட சந்தா ரூ.200/-

முகவரி: கி.தானப்பன், பிளாட் எண்: 25, கதவு எண்:10, 2-வது தெரு,
அருள் நகர், மாதவரம் பால்பண்ணை, சென்னை.600 051,
Ph: 044 25552073, 9840259614 , kt.appan@yahoo.co.in

---

நாஞ்சில் மலருக்கு சந்தா, நன்கொடை, NEFT மூலம் அனுப்ப விரும்புபவர்கள் , NANCHIL MALAR, Current A/C No. 332901010035895, ( IFSC: UBIN0533297) UNION BANK OF INDIA, MADHAVARAM, CHENNAI 600110 .என்ற முகவரிக்கு அனுப்பி விட்டுத் தங்கள் முகவரியைத் தெரிவிக்கவும்.

---

நாஞ்சில் மலரில் வாசக அன்பர்களால் எழுதப் பெற்று வெளிவரும் கட்டுரைகள், கருத்துக்கள், தகவல்கள் அனைத்தும் அவர்களது சொந்தக் கருத்துக்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். - ஆசிரியர்

# தமிழக முதல்வர்
# மாண்புமிகு எடப்பாடி திரு K. பழனிசாமி
# அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!

கடந்த மூன்று ஆண்டுகளாக, முதல்வராகப் பணியேற்ற நாளிலிருந்தே தமிழக முன்னேற்றத்திற்காகத் தன்னை அற்பணித்துக் கொண்டவர் **திரு K பழனிசாமி .** ஒரு சாமானியரான, விவசாயியான அவர் இன்று சாதனைகள் பல படைத்துத் தமிழகத்தை அம்மா வழியில் இந்தியாவின் முதன் மாநிலமாக ஒளிரச் செய்த பெருமைக்குரியவர் என்றால் அது மிகையல்ல.

அவரது சாதனைகளை ஆவணப்படுத்துவது என்றால் அது பெரும் நூலாக உருவெடுக்கும் ; தமிழகத்தின் ஒரு வரலாற்று நூலாக அமையும்!.

அம்மாவின் மறைவிற்குப் பிறகு கட்சியில் ஏற்பட்ட பல்வேறு குழப்பங்கள் சலசசலப்புக்கள் எல்லாம் அடங்கி/அடக்கப்பட்டு எல்லாமே ஒரு வித சமநிலைக்குத் திரும்பி கட்சியினர் அமைதியாகி நாம் தேர்வு செய்து முதல்வரான, நம் தோழர் எளிமையும் அமைதியும் கொண்டவர்; சாதனை புரியத் தகுதியானவர் என உணர்ந்து அவரது ஆக்க பூர்வச் செயல்கள் அனைத்திற்கும் ஆதரவளித்து தோளோடு தோள் நின்று செயல் படுகிறார் கள் என்றால் அது மிகையல்ல. சாதாரண தொண்டராகக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்ட அவர் கட்சியின், ஆட்சியின் நுணுக்கங்களை அமைதியாக இருந்து கற்றுத் தேர்ந்தவர்.

**ஒரு சாமானியரான அவர் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று சாதித்தவைகளை சுருக்கமாகப் பட்டியலிட்டால் அவை கீழ்குறிப்பிட்ட வாறு இருக்கும்...**

2019 சனவரி 1 ஆம் தேதி பிளாஸ்டிக் உபயோகத்திற்குத் தடைவிதித்து வெற்றி கண்டது.

அரசால் செயல்படுத்தப்படும் அனைத்தும் வெளிப்படைத் தன்மை வாய்ந்தவை.

அம்மாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிய தற்போதைய அரசின் செயல்பாடுகள் அனைத்தும் தமிழக மக்களின் நலன் சார்ந்தவை.

ஆளும் அரசை தொந்தரவு செய்வதற்கும் மக்களைத் குழப்புவதற்கும் பதட்டப் படுத்துவதற்குமான எதிர்கட்சிகளின் நடவடிக்கைகளைப் புறந் தள்ளி விட்டு அரசு செயலாற்றுவது பாராட்டுக்குரியது.

நல்லவர், எளிமையானவர், மக்கள் குறை கேட்டுத் தீர்ப்பதில் வல்லவர். அறிஞர் பெருமக்களின், நடுநிலையானவர்களின் ஆலோசனை கேட்டு

நடப்பது அவரது தனிச்சிறப்பு. அவர் நல்லாட்சி நடத்துவதற்கான நுட்பத்தை அறிந்தவர்.

முதல்வர் மீது குற்றம் சாட்டுவதற்கான வாய்ப்பை எதிர் கட்சிகளுக்கு அளிக்கவில்லை.

முதல்வர் அலுவலகமும் அரசின் மேல்மட்டமும் அனைத்துப் பொதுமக்களும் அணுகும் விதமாகச் செயல்படும் விதம் குறிப்பிடத்தக்கது.

தொழில்துறை, கல்வி, வேலைவாய்ப்பு ,ஏழை எளியவரின் நலன் காத்தல், வீட்டுவசதி ,ஊரகவளர்ச்சி, விவசாயம், மருத்துவம் சுகாதாரம் என அனைத்துத் துறைகளிலும் நுட்பமான அணுகுமுறையோடு கூடிய இந்த அரசின் செயல் பாடுகள் குறிப்பிடத்தக்கன.

இவ்வாறு மக்கள் முதல்வர் திரு எடப்பாடி K.பழனிசாமி என்று போற்றும் வகையில் அவரது அனைத்துச் செயல்பாடுகளும் அமைந்துள்ளன.

அரசு மூன்று ஆண்டுகளில் காவிரி நீர் மேலாண்மை வாரியம் அமைப்பதற்கான தீவிரம் காட்டி வெற்றி கண்டது.

உலகளாவிய முதலீட்டாளர்களிடம் இருந்து சுமார் 3 லட்சம் கோடி அளவிலான முதலீடுகளால் தமிழகத்தில் தொழில் தொடங்க கொள்கையள வில் அனுமதி அளித்தது.

பாரம்பரியமான நீர் நிலைகளை மீட்டெடுக்க குடிமராமத்துக்கு உயிரூட்டி சீர்செய்து அமல்படுத்த அரசு விரைவாக முடிவெடுத்துள்ளது குறிப்பிடத் தக்கது. மேலும் தமிழகத்தை நீர் மிகை மாநிலமாக உருவாக்குவோம் என உறுதியோடு அதற்கான திட்டங்கள் வகுப்பது.

கடந்த மூன்றாண்டுகளில் சுமார் 16,400 கோப்புகளுக்குத் தீர்வுகண்டது.

உழவர் மேம்பாட்டுக்காக, எட்டு காவிரிப் படுகை மாவட்டங்களில் மேற்கொண்டு எந்தவிதமான ஹைட்ரோகார்பன் திட்டத்திற்கும் அனுமதி இல்லை என்பதோடு அந்தக் காவிரி விவசாயப் படுகையைப் பாதுகாக்கப் பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தது,

ஹார்வேர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க ரூபாய் 10 கோடி நிதி வழங்கி ஊக்குவித்ததோடு இல்லாமல் மற்றும் உலகப் பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கை அமைக்க ஆவனசெய்து வருவது தமிழின் பால் அவருக்கும் அவரது அமைச்சரவைக்கும் உள்ள ஈடுபாட்டைக் காட்டு வதாக உள்ளது.

மத்திய அரசு, தமிழக அரசின் நல்லாட்சிக்காக தரவரிசைக் குறியீட்டில் முதலிடம் வழங்கியது குறிப்பிடத்தக்கது..

அண்டை மாநிலங்கள், மத்திய அரசு இவற்றுடன் இணக்கமான போக்கைக் கடைப்பிடித்து தமிழக நலன் காக்க முனைந்து செயல்படுவது.

இவையெல்லாவற்றையும் விட தமிழக அரசு எந்திரம் கடந்த காலப் பேரிடர் காலங்களில் மக்கள் நலன் காக்க செயல்பட்ட முறை, எடுத்த

போர்க்கால நடவடிக்கைள் அனைத்தும் பாராட்டுகளுக்கும் போற்றுதலுக்கும் உரியதாகும்!.

இதையெல்லாம் விட தற்போது உலகநாடுகள் அனைத்தையும் முடக்கி தினம் தினம் மனித உயிர்களைக் காவு வாங்கிக் கொண்டிருக்கும் கண்களுக்குப் புலப்படாத கொரானா என்ற கொடிய நோய்க்கிருமியை எதிர்த்துப் உலகமே போராடிக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் ஐரோப்பிய நாடுகள், வளைகுடா நாடுகள் என சுமார் 199 நாடுகள் இந்த வைரசால் பாதிக்கப் பட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. இந்தியாவிலும் தமிழகத்திலும் மிகப் பொறுப்புடன் அரசு செயல்பட்டும் நாளுக்கு நாள் பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவதை அறிந்து பொறுப்போடு அரசு எந்திரம் விசுவரூபம் எடுத்துச் செயல்படத் துவங்கியுள்ளது என்பதை அறிவோம்.

மக்களாட்சியில் எல்லையில்லா சுதந்திரத்தை கையிலெடுத்து வாழ்ந்து பழகிய மக்கள் ஊரடங்கு, சுயக் கட்டுப்பாடு போன்றவற்றிற்கு முக்கியம் கொடுத்தே ஆகவேண்டும் என்பது அரசின் இன்றைய நிலைப்பாடு. இரவு பகல் பாராது காவல்துறை, மருத்துவத்துறை என அனைத்துத் துறைகளும் முடுக்கிவிடப்பட்டு, முதலமைச்சரின் தலைமையில் செயல்படும் அமைச்சரவைக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்று நம்புவதோடு, மாபெரும் போரில் ஈடுபட்டுள்ள நம் முதல்வருக்கு அனைத்து வகையான ஒத்துழைப்பையும் நல்கிச் செயல்படுவது நம் ஒவ்வொருவரது கடமை!.

ஏழை எளியவர்களுக்கு அம்மா உணவகங்கள் மூலம் உணவளிப்பது, புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ஆதரவு ,வெளிநாடு, வெளி மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்கு வேண்டுவனச் செய்வது போன்ற நடவடிக்கைகள் பாராட்டுக்குரியன.

**நாட்டில் இப்போது நிலவி வரும் அசாதாரண நிலைமை அதற்கு அரசு எடுத்துவரும் போர்க்கால நடவடிக்கைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு மக்கள், ஊடகங்கள், எதிர்கட்சிகள் அனைவரும் சுயக்கட்டுப்பாட்டோடு ஒருமித்துச் செயல்பட்டால் மட்டுமே மக்களைக் காப்பாற்ற முடியும்.**

நம் முதலமைச்சரும் அரசு எந்திரமும் இந்த கொரானாவுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றிபெறுவது நம் அனைவரின் செயல்பாட்டிலேயே உள்ளது!. அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்களால் உன்னிப்பாக கவனிக்கப் படுவதுடன் இந்த நல்லாட்சி தொடர வேண்டும் என்ற ஆதரவு மக்களிடையே பெருகி வருவதைக் காணமுடிகிறது!.

**கி. தானப்பன் , நாஞ்சில் மலர்**

# டாக்டர் ஆ. சிவதாணு பிள்ளை,

### பிரமோஸ் ஏவுகணை விஞ்ஞானி அவர்களின்

### 'பயணிக்கத் துணியாத பாதை - பிரமோசின் வெற்றி மந்திரம்' புத்தகத்தில் இருந்து .......



ஒருநாள் அரேபியக் கடலில் கடற்படைப் போர்க்கப்பல் ஒன்றிலிருந்து அதிசயிக்கத் தக்க வகையில் வெற்றிகர மாகப் பிரமோஸின் பறத்தல் வெள்ளோட்டத்தை நிகழ்த்திய பிறகு, கோவாவிற்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதிக்கு நெடுங்கடற் பயணத்தில் சென்று கொண்டிருந்தேன். வெற்றிகரமான வெள்ளோட்டத்திற்கான போர்க்கப்பலில் கொண்டாட்டம் நடந்து கொண்டிருந்தது. எவ்வளவு பெரிய அமைப்பு நம் மிடம் உள்ளது ! இது வழுவற்றது; துல்லியமானது. மற்றும் அதிவேகமானது. என்னுடைய பயணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த கேப்டனின் அறைக்குத் திரும்பி வந்தேன். அங்கு ஏவுகணையின் செயல்பாடு மற்றும் எங்களுக்காக முன்னால் கிடக்கும் பணிகள் ஆகியவற்றைக் குறிப்புக்களாக எழுதத் தொடங்கினேன். சட்டென்று இன்னும் கனவு காண்பதற்குக் கொஞ்சம் இதமான காற்று வேண்டுமென நான் நினைத்தேன். ஆகையால் கப்பலின் மேற்பகுதியில் அமைந்த பயணக் கட்டுப்பாட்டு அறைப் (Bridge) பகுதிக்குச் சென்று கடற்படைக் கமாண்டரின் வெண்துகில் போர்த்திய உயரமான நாற்காலியில் நான் உட்கார்ந்தேன். நான் அங்கு தனியாக அமர்ந் திருந்து இயற்கையின் அழகைக் காணத் தொடங்கினேன். மாலை நேரக் குளிர்ந்த கடலின் இதமான காற்று என்னைத் தழுவிக்கொண்டிருந்தது. அடைகின்ற ஆதவனின் கதிர்கள் படர்ந்து ஒளிவீசிக் காட்டியது. அதைத் தொடர்ந்து மூழ்கத் தொடங்கிய சூரியனின் இளம் சிவப்புக்கதிர்கள் மேகங்களை ஊடுருவிக் கொண்டிருந்தன. ஆழ்ந்த நீலத்தில் இருந்து இப்பொழுது கருமையாக மாறிய கடல் தன்னுடைய அலைகளால் கப்பலின் அடித்தளத்தைத் தாளத்தோடு தட்டியது. அதில் சிறிய நீர்த்துளிகள் கப்பலின் மேல் தளத்தில் வீழ்ந்தன. கண்கவரும் மீன்கள் கூட்டங்கூட்டமாக மேல் நோக்கித் தாவுவதும், நீருக்குள் மூழ்குவதுமாய் இருந்தன. இது இருளுக்கு மாறும் நேரம். நான் மேல் நோக்கிப் பார்த்தேன். தண் சுடர் எழுந்தது; பால் போன்ற வெண்கதிர்களைப் பரப்பி ஒளி வீசியது. சில விண்மீன்களும் கண் சிமிட்டத் தொடங்கின. நான் வேறோர் உலகத்தில் இருந்தேன் ; என்னே அரபிக்கடலின் அழகு!.

திடீரென அழகுக் காட்சிகளை ஆராதிப்பதை எனது மனது நிறுத்தியது. ஏவுகணைத் திட்டத்துக்கு இட்டுச்சென்ற எண்ணற்ற நினைவுகள் என்

மனத்திரையில் ஓடத்தொடங்கின. படைவிலக்கம் பெற்ற கப்பலொன்றை ஏவுகணை நடுமையத்தில் துல்லியமாகத் தாக்கி தன் வேகத்தின் இலக்கு முழுவதையும் எரிந்து போகச் செய்த நிகழ்வுடன் இது தொடங்கியது. இப்பறத்தல் வெள்ளோட்டம் பாடப்புத்தகத்தில் எழுதப் பட்ட செயல்போன்று, திட்டப்பணிகளின் அனைத்து வரையறைகளையும் நிறைவேற்றியும் வெற்றி கரமான இலக்கை அழித்தும் நிகழ்ந்து முடிந்தது. இந்தியக் கடற்படை அடைந்த பெருமிதத்தை என்னவென்பது! இந்திய மற்றும் ரஷ்ய அறிவியல் அறிஞர்களின் கூட்டு முயற்சியால் ஆயுதப் படைகளின் பல்வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஏவுகணையின் வலிமையான வடிவமைப்பு உருவானது. ஏவுகணையின் குறிப்பிடத்தக்க செயல்பாடும் நம்பகத் தன்மையும் உலகளாவிய நிலையில் ஏவுகணை அறிவியல் அறிஞர் களைத் திகைப்பில் ஆழ்த்தியுள்ளன. இதன் சிறந்த செயல் திறன்கள் உல கின் வேறெந்தப் பகுதியில் தயாரித்த தாக்குதல் ஏவுகணையைக் காட்டிலும் மிகச்சிறந்ததாகும். நான் உணர்ச்சி ததும்பிய நிலையில் இருந்தேன். பிரமோஸ் மற்றுமொரு முறை தன்னுடைய உயர்வை உலகிற்கு உறுதிப் படுத்தி விட்டது.

இவ்வாறு ஒவ்வொரு வெற்றிகரமான ஏவுதலுக்குப் பின்பும் மகிழ்ச்சி என்னைச் சூழ்ந்து கொண்டது. குழுவினரின் கொண்டாட்டம் எதிரொலித் தது. ஆயினும் இந்த முறை நடைபெற்ற பறத்தல் வெள்ளோட்டம் என்னை மாறுபட்ட மனநிலையொன்றில் வைத்தது. இத்திட்டத்தின் தொடக்க நாட்களை நினைக்கத் தொடங்கினேன். இந்தக் கூட்டுப் பணித் திட்டத்தை வெற்றிக்குக் கொண்டு சென்றது எது என்று வியப்பில் ஆழ்ந்தேன். அந்த தொடக்க நாட்கள் மிகவும் ஆக்கமளித்த நாட்கள். ஏனெனில் இவ்வலிமை வாய்ந்த திட்டத்திற்கு அடித்தளம் இட்டதும் வலிமையைத் தந்ததும் அந்நாட்களே. நாங்கள் செலவு செய்த எண்ணிலடங்கா மனித நேரங்கள் கூட்டுப் பணித் திட்டத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது.

1995 ல் கூட்டுப்பணித் திட்டத்தை அமைப்பதற்கான கருத்து உருவான போது, ஒருங்கிணைந்த வழிகாட்டுதல் அமைந்த ஏவுகணை உருவாக்கத் திட்டத்தில் (IGMDP) நான் திட்ட இயக்குனராக இருந்தேன். அப்போது டாக்டர் கலாம் இந்திய அரசின் ஒப்புதலுடன் நான் தான் கூட்டுப்பணித் திட்டத்தின் CEO - வும் MD- யும் என்று கூறினார். இந்தியாவுக்கு ஒரு தாக்குதல் ஏவுகணை வேண்டும் என்பதை அழுத்தமாக முன் மொழிந்தவன் நான் என்பதால், கூட்டுப் பணித்திட்டத்தை அமைப்பதற்கான பணிகளைத் தொடக்கத்தில் இருந்தே நான் செய்தேன். ஆகவே JV - யை வழிநடத்த நானே இயல்பானத் தேர்வாக அமைந்தேன்.

மூத்த அதிகாரிகள் உட்பட என்னுடைய நலம் விரும்பிகள் பலர் ரஷ்யாவுடனான கூட்டுப் பணித்திட்டம் வெற்றியைத் தராது என்றும் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டாம் என்றும் எனக்கு ஆலோசனை கூறினர். அவர்கள் அவ்வாறு கூறியதன் காரணம் சோவியத் யூனியன் உடைந்து போனதும், 1990-களில் ரஷ்யாவின் பொருளாதாரச் சூழல் மிகவும் சரிந்து போனதுமே ஆகும். மேலும் முந்தைய கூட்டுப் பணித்திட்டங்களின் அனுபவங்கள் அவ்வளவு ஊக்கமூட்டுவைகளாக இல்லை. குறிப்பாக முன்னேறிய தொழில்நுட்பப் பரப்புகளின் தயாரிப்பு கைகூடுவது பெரிய சிக்கலாகவே இருந்துள்ளது. ஆயினும் பெரும் தொலை நோக்கு கொண்டவர்கள் பற்றி நான் படித்திருந்ததை நினைத்து மனவுறுதியடைந் தேன்.அதன் விளைவாக நான் என்னுடைய வழியில் எதிர் கொள்ளும் சவால்களைச் சந்திக்கத் தீர்மானித்தேன். இந்தியாவின் தொழில்நுட்ப வளர்ச்சிக்காகப் பாடுபட்ட டாக்டர் விக்ரம் சாராபாய், பேராசிரியர் சதீஷ் தவான் மற்றும் டாக்டர் அப்துல் கலாம் போன்ற மரியாதைக்குரிய மனிதர்கள் என்னைச் சரியான நிலையில் நிற்க வைப்பார்கள் என்று உறுதியாக இருந்தேன்.

அத்தகைய தொலைநோக்குள்ள தலைவர்கள் எதிர்பார்த்த விளைவுகளைப் பெற்றுத்தரும் அற்புதமான பண்பாட்டை ஏற்படுத்தித் தந்துள்ளனர். இளம் பொறியாளர்கள் மற்றும் அறிவியல் அறிஞர்களின் மிகச் சிறிய சாதனைகளையும் கூட அவர்களின் பணிநிலையைக் கருத்தில் கொள்ளாமல் அவர்களை ஆதரித்த முறையையும் அவர்களின் தவறுகளை மிக மென்மையான முறையில் சுட்டிக்காட்டிய தன்மையும் மிகவும் பெருமைக்குரியனவாகும். இரு நாடுகளின் உயர்ந்த அறிவியல் மனங்களை ஒன்று சேர்த்தும் , நட்பையும் நம்பிக்கையையும் உந்து சக்தியாகக் கொண்டும், பிரமோஸ் ஒரு முன் பின் நடந்திராத வெற்றிக் கதையாக உருவாகும் என்பதில் நான் உறுதியாக இருந்தேன்.

பிரமோஸ் என்ற நிறுவனத்தின் கூட்டுப் பணித் திட்ட சி.இ.ஒ. வாகவும், எம்.டி. யாகவும் நான் பொறுப்பேற்றேன். இதனால் DRDO- வில் ஏவுகணைத் திட்டத்தின் R&D யின் தலைமைக் கட்டுப்பாளராகவும், பிரமோஸில் சி.இ.ஒ. மற்றும் எம்.டி. ஆகவும் நான் பணியாற்ற வேண்டிய அவசியத்தை ஏற்படுத் தியது. இவ்விரண்டு பதவிகளின் பணிகளையும் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டு மேற்கொள்ள வேண்டியிருந்தது. இப்பொழுது, நான் இவற்றை மறுபடியும் சிந்தித்துப் பார்க்கும் போதெல்லாம், உடல் சிலிர்த்துப் போவதோடு, ஓய்வில்லாத ஆனால் பலன்நிறைந்த அந்த நாட்களை உள்ளத்தில் வைத்துப் போற்றுகிறேன்.

இன்று பிரமோஸ் கூட்டுப்பணித்திட்டம் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அமைந்த, வெற்றிகரமான பாதுகாப்புக் கூட்டுறவுக்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டு என்று உலகம் முழுவதும் பாராட்டப்படுகிறது. இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு ஏவுகணைத் தொழில் நுட்பங்களில் சிறப்பறிவுப் பரிமாற்றங்கள் ஏற்பட்டதால், தன்வகையில் மிக வலிமை வாய்ந்த ஏவுகணையை உருவாக்க முடிந்தது.

அறிவியல் அறிஞர்கள் வடிவமைப்பு நிலையிலிருந்து உற்பத்தி நிலைவரை தோளோடு தோள் நின்று பணியாற்றினர். வடிவமைப்பு மேம்பாடு, தயாரிப்பு மற்றும் சந்தைப் படுத்துதல் ஆகிய நிலைகளில் நாங்கள் பெற்ற அனுபவங்கள் அச்சத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்துபவையாகும். இன்று, பல நாடுகள் தங்கள் ஆயுதப் படைகளுடன் இணைத்துக் கொள்ள ஏதுவாகப் பிரமோஸ் ஏவுகணை அமைப்பைத் தங்களுக்கு விற்குமாறு வேண்டுகின்றனர். அதே நேரத்தில், சக்திவாய்ந்த நாடுகள் உட்பட பல நாடுகள் கவலை அடைந்துள்ளன. பிரமோஸ் மிகையொலி வேகத்தாக்குதல் ஏவுகணை ஒரு மிகச்சிறந்த தொழில் நுட்பத் திருப்புமுனையாக விளங்குகிறது. இதற்குக் கூட்டுப்பணி திட்டத்தின் புதுமையான அமைப்பிற்கே நன்றி கூற வேண்டும். காலத்தின் பாதையில் சற்றே பின் நோக்கிச் சென்றால், இந்தியா பழங் காலத்தில் கணிதம், அறிவியல், பொறியியல் தொழில் நுட்பம், வானியல் மற்றும் அண்டவியல் ஆகிய பரப்புகளில் விஞ்சி யிருந்தனர் எனக் காண்கிறோம். அவற்றுள் பல கண்டுபிடிப்புகளும் உண்டு; ஆனால் முறையான ஆவணப் படுத்துதல் இல்லை; ஒருவேளை அத்தகைய சாதனைகளை தவறான நோக்கங்களுக்குப் பயன் படுத்திவிடுவர் என்று கருதி அவற்றைப்போலச் செய்வதைத் தடுக்க நினைத்திருக்கலாம்.

அந்நாட்களில் சாதிக்கப்பட்ட பல பொறியியல் அரிய செயல்கள் தற்காலத் தொழில் நுட்பத்திற்கு இணையானவை. தமிழ் நாட்டில் திருச்சி மாவட்டத் திலுள்ள அணை ஒன்றை எடுத்துக் கொள்வோம். அது 2000 ஆண்டுகளுக்கு முன் கரிகால் சோழனால் கட்டப்பட்டது. கற்களாலும் சுண்ணாம்புக் கலவையாலும் கட்டப் பெற்ற அவ்வணை உயரத்தில் இருந்து பார்க்கும் போது பாம்பின் தடம் போன்றுள்ளது. 18 ஆம் நூற்றாண்டில் அவ்வணை ஆங்கிலேயரால் மறு வடிவாக்கம் செய்யப்படும் வரை, அது ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நீரைத் தேக்கிக்கொண்டிருந்தது. இன்று கர்நாடகாவிலும் தமிழ்நாட்டிலும் காவிரி மற்றும் அதன் துணை நதிகளின் குறுக்கே பல அணைகள் கட்டப்பட்டுவிட்டதால் இங்கு நீரோட்டம் பெருமளவு குறைந்து விட்டது.

ஆனால் அந்நாட்களில் அணைகள் கட்டப்படாமல் இருந்ததனால் நீரோட்ட்ம் மிகுந்து இருந்திருக்கலாம். அவ்வளவு பெரும் நீரோட்டத்தை

எப்படி மாற்றுப் பாதையில் திருப்பி விட்டு, எப்படி இந்த அணையைக் கட்டியிருப்பர் என்று வல்லுனர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அசாதாரண மற்றும் விலங்கு ஆற்றல்கள் ஒன்று சேர்க்கப்பட்டு இது நடத்தப்பட்டிருக்கலாம். ஆனால் அதற்கான ஆவணம் நம்மிடம் இல்லை. இதுபோன்று குதுப்மினார் அருகில் இரண்டாயிரம் ஆண்டுகளாக ( 912 கி.மு.) துருப்பிடிக்காமல் நின்று கொண்டிருக்கும் இரும்புத் தூண் உலோக வியல் அதிசயமாகும். இங்கும் இத்தூணில் அடங்கியுள்ளவை எவை என்றும், இது எவ்வாறு செய்யப்பட்டது என்றும் அறிந்து கொள்ள ஆவணம் ஏதும் இல்லை.

பழங்கால இந்தியா மருத்துவ அறிவியலிலும் உச்சி வானில் திகழ்ந்தது. ஆச்சார்யா சுஷ்ருத்; அவர் காலத்திலேயே உருமாற்று அறுவை சிகிற்சை செய்தார் என்று சொல்லப்படுகிறது. நம்முடைய சித்தர்களும் பாதரசம் மற்றும் ஆர்சனிக் போன்ற நச்சுத் தன்மையுள்ள வேதியியல் பொருட்களைப் புற்று நோய் போன்ற கொடிய வியாதிகளுக்கு பயன்படுத்துவதில் சிறந்து விளங்கினர்.

அவர்கள் வேதிப் பொருட்களை நானோ தூள் வடிவில் ( பஸ்பம் ) பயன் படுத்தினர். இது நானோ தொழில் நுட்பம் இந்தியாவிற்குப் புதிதல்ல என்பதைக்காட்டுகிறது. இத்தகைய மருந்துகளைத் தயாரிக்கும் வேளையில் அவற்றில் இருந்த வரும் நச்சுப் புகையைச் சரியாகக் கையாள வேண்டும்; இல்லையெனில் அவற்றைச் சுவாசிப்பவருக்கு மரணம் நிச்சயம். இத்தகைய நிலைகளை வெல்ல, அவர்கள் யோகக் கலைகளைப் பயன்படுத்தி மூச்சுக் காற்றைக் கட்டுப் படுத்திக்கொண்டனர்.

அரிதாகக் கிடைத்திருக்கும் சில ஆவணங்களில் அவர்கள் பதிவு செய்திருக்கும் சில வேதியியல் சேர்மானங்கள், பல முன்னேற்றங்கள் நிறைந்த இக்காலத்தில் கூட செய்ய முடியாதவையாக விளங்குகின்றன. அவர்கள் பல கொடிய நோய்களைக்கூட குணப்படுத்தினர் என்ற பதிவுகள் காணப்பட்டாலும் அவற்றிற்கான கையேடுகள் கிடைக்கப் பெறவில்லை. நானே அத்தகைய மருத்துவ அதிசயத்தைற்கு சாட்சி. நான் பத்து வயது சிறுவனாக இருந்த போது, என்னுடைய தகப்பனார் திரு. ஆபத்துக்காத்த பிள்ளை ( மற்றவர்களை ஆபத்தில் இருந்து காப்பவர் என்று பொருள்). சித்தம், ஆயுர் வேதம், யோகம் ஆகியவற்றில் ஒரு விற்பன்னர்; அவர் புற்று நோய் போன்ற கொடிய நோய்களைக் குணப்படுத்தியதைக் கண்டிருக் கிறேன். ஆயினும் முன்னோரைப் போன்றே இவரும் எத்தகைய பதிவையும் விட்டுச் செல்லவில்லை. (தொடரும்)

*சென்னையில் நம் சமுதாயம் சார்ந்த அனைத்து சுப மங்கள நிகழ்வுகளையும்* ***தமிழ் முறைப்படி*** *நடத்தித்தர வேண்டுமானால் தொடர்பு கொள்ளவேண்டிய* ***தொலை பேசி எண்: 9952016994 -***

***சிவனடியார் கூட்ட கயிலைத் திரு மாமணி அசோகன்***

# திருமண வாழ்த்து!



*வெள்ளமடம் திரு.E.சிவகாமிநாதன் - திருமதி S.நாகேஸ்வரி தம்பதியினரின்*

***புதல்வி திருவளர்ச்செல்வி S.சுப்புலெட்சுமி (எ) ஜெயஸ்ரீ***

*புதுக்கிராமம் திரு.S. அருணாசலம்( கண்ணன்) - (தெய்வத்திருமதி சுப்பு லெட்சுமி) திருமதி S.வள்ளி ( சித்ரா) தம்பதியினரின்*

***புதல்வன் திருவளர்ச் செல்வன் A.சிவசுப்பிரமணியன் ( சரவணன்)***

*ஆகியோரது திருமணம் 06-12-2019 அன்று இறச்சகுளம் J.S.திருமண மண்டபத்தில் வைத்து சிறப்புற நடைபெற்றது.*

*மணமக்கள் சகல நலன்களும் பெற்று சிறப்பாக வாழ*

***நாஞ்சில் மலர் வாழ்த்துகிறது!.***





**கன்னியாகுமரி** மாவட்டம் மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் கொடியேற்று விழாவின் போது வருகை தந்திருந்த **மேதகு தெலுங்கானா மாநில ஆளுநர் திருமதி டாக்டர் தமிழிசை சௌந்திரராஜன்** அவர்களை நாகர்கோவில் கலை இலக்கிய உலகப் பேரவை இயக்குனர்கள் சந்தித்து பேரவை சார்பாக ஆகஸ்டு மாதம் நடைபெற இருக்கும் விழாவிற்கு வருகைதருமாறு வேண்டினர்.

பேரவையின் செயல்பாடுகள் குறித்துப் பதிவு செய்யப் பெற்ற கோப் பினை வழங்கி பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர். சந்திப்பின் போது பேரவையின் மேலாண் இயக்குநர் தெ.வெ.பகவதிப் பெருமாள், இயக்குநர்கள் திருமதி சொர்ணலதா, கோபி ஆகியோர் உடனிருந்தனர்.

நாஞ்சில் மலர் துணையாசிரியர் தேரூர் மு.கோபி, நாஞ்சில் மலர் மாத இதழ்களையும், நாஞ்சில் மலரில் வெளிவந்த 'சிங்கம் வீடு' சிறுகதை தொகுப்பு நூலையும் ஆளுநருக்கு வழங்கினார்.

---

பிரார்த்தனை என்பது மதம் சம்பந்தப் பட்டதல்ல - நமது
மனம் சம்பந்தப் பட்டது.
மனிதர்களுக்கும் கடவுளுக்குமான மொழி அது !

மனம் ஒன்றிச் செய்யப்படு ம் பிரார்த்தனை
ஓர் அதிசயத் திறவுகோல்!

பேராசிரியர், முனைவர் பி.யோகீசுவரன்
அவர்களது எண்ண ஓட்டத்தில் பழைய நினைவுகள்!
சென்ற இதழ்த் தொடர்ச்சி...

# கவிமணிக்கு சிலையமைத்து பெருமை கொள்வோம்!.



### சென்னைக் கவிமணி மன்றத்தின் கனிவான வேண்டுகோள்!

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை 1876 ஆம் ஆண்டு தேரூரில் பிறந்து வளர்ந்தார். அக்காலத்தில் நாஞ்சில் நாட்டில் பள்ளிக்கூடங்களில் தமிழ்ச் சொல்லித் தருவதில்லை. மலையாளம் தான் படிக்க வேண்டும். தாய்மொழி ஆர்வத்தால் திருவாடுதுறை ஆதினத்தைச் சார்ந்த சாந்தலிங்கத் தம்புரான் என்ற பெரியவரிடம் சென்று தாய்மொழியாம் தமிழைக் கற்றார். அதன் விளைப் பயனாகத்தான் 19 ஆம் வயதிலேயே அழகம்மை ஆசிரிய விருத்தம் என்ற கவிநூலை எழுதினார். அதைப் படித்த ஆசிரியர்கள் தேவாரம் திருவாசகம் போலவும் தாயுமானவர் பாடல் போலவும் பக்தியும் தமிழும் விரவிக் கிடப்பதைக் கண்ணுற்றுப் பாராட்டினர்.

இன்டர்மீடியட் வரை ஆங்கிலம் கற்ற தேவி (தேசிகவிநாயகம்) ஆங்கிலத் திலும் தமிழிலும் புலமை வாய்ந்தவராகத் துலங்கினார். திருவனந்தபுரத்தில் தமிழ் ஆசிரியராகப் பணி செய்தபோது அங்குள்ள தமிழ்ப் பிள்ளைகள் தமிழ்க் கவிதைகளைப் படிக்க முடியாமலும் படித்தாலும் பொருள் புரியாமலும் அல்லாடுவதைக் கண்ணுற்றார் தேவி. மக்கள் பேச்சு வழக்கிலுள்ள எளிய சொற்களை இசையின் கூறான தாளத்துடன் பொருந்த, கவிதைகளைப் புனைந்து இளம் பிள்ளைகள் படித்தறியும் வண்ணம் தமிழுக்குத் தந்தார். இன்றளவும் இலட்சக்கணக்கான இளஞ்சிறார்கள் அக்கவிஞரின் கவிதை களைப் படித்துக் களிப்புறுகின்றனர். புதுமைப் படைப்பான இக்குழந்தைப் பாடல்களைத் தமிழ் இதழ்கள் சில வெளியிட்டன. தமிழ் உலகம் தேவியைப் பாராட்டத் தொடங்கியது. அக் கவிமலர்கள் தொகுக்கப் பெற்று ' மலரும் மாலையுமாக' த் தமிழ் மணம் பரப்பி வருகிறது.

ஆழமான ஆங்கிலக் கல்வியின் வழி ஆங்கில இலக்கியங்களையும் அம்மொழி வழி உலக இலக்கியங்களையும் உற்றுணர்ந்தார் தேவி. கற்றறிந்த தோடு அமையாது' பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்ற பாரதிப் புலவனின் அறைகூவலை உளங்கொண்டு தமிழுக்குப் புத்திலக்கியங்களை கவிமணி படைத்தளித்தார்.

*அர்னால்டு ஆக்கிய "Light of Asia" என்ற ஆங்கில இலக்கியத்தை அழகுத் தமிழால் ஆசிய ஜோதி என்றப் பெயர் சூட்டிப் படைத்தார். புத்தரின் நெறிமுறைகளை அப்பனுவல் பறைசாற்றியது. அன்பிற்கும் அறத்திற்கும் நாயகனாய் ஒளிசெய்த அருளாளர் கௌதமரின் கருத்துரைகள் தமிழ் வாசிக்கத் தெரிந்தவர்களுக்கெல்லாம் தெளிவுரையாய் வாய்த்து நிற்கிறது.*

*பாரசீகப் புலவர் உமர்கையாம் ஒரு தத்துவ விற்பன்னர். அவர் தம் தத்துவச் சிந்தனைகளைத் தமிழ் மக்கள் உளங் கொள்ளுமாறும் மொழிமாற்றத்துடன் தமிழர் வாழ்வியல் தத்துவத்திற்கு பொருந்துமாறும் கவி புனைந்தார்கவிமணி.*

*கவிஞராயினும் அறிஞராயினும் ஆட்சியாளராயினும் தன்னைச் சூழ இருக்கும் சமுதாயத்தை மேம்படுத்துதல் அவர் தம் கடப்பாடு ஆகும். கவிமணி நாஞ்சில் நாட்டு மக்களின் வாழ்வியலில் ஒரு தொற்று நோய்போல படர்ந்திருந்த மருமக்கள் வழி என்ற பழக்க வழக்கம் அச் சமுதாயத்தைச் செல்லரித்துச் சிதைப்பதை அறிந்தார். மருமக்கள் வழி என்பது மலையாள நாட்டில் அரசர்களும் நாயர் சமுதாயத்தினரும் வேறு சில மக்களும் பண்டை நாட்களில் இருந்து நடைமுறைப் படுத்தி வரும் ஒரு பழக்க வழக்கம்.. மக்கள் வழியினரான நாஞ்சில் நாட்டு வேளாளரும் அரச நிர்பந்தத்தால் 12 அல்லது 13 ஆம் நூற்றாண்டில் மருமக்கள் வழி வாழத் தலைப்பட்டனர்.*

*மருமக்கள் வழிப்படி ஒரு குடும்பத்தலைவரின்(காரணவர்) சொத்துக்கள் முதலிய உடமைகள் அவர் காலத்திற்குப் பிறகு அவர் தம் உடன் பிறந்த சகோதரியின் மகனுக்கே உடமையாகிவிடும். அத்தலைவரின் பிள்ளைகள் உவந்துடமை என்ற ஒரு சிறிய தொகையைப் (பணத்தை) பெற்றுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும். இது பழம் பெரும் தாய்வழியான சமுதாயத்தின் கூறு என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்..*

*பெற்ற பிள்ளைகளைத் தெருவில் விடும் இக்கொடிய நடைமுறையை நாஞ் சில் நாட்டு வேளாளர் வாழ்வியலில் இருந்து அப்புறப்படுத்த போர்ப் பரணி பாடினார் கவிமணி. அந்நாட்களில் 'தமிழன்' என்ற இதழ் திருவனந்தபுரத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்தது. அந்த இதழில் மருமக்கள் வழி முறையை எதிர்த்து எழுதினார் கவிமணி. வஞ்சகப் புகழ்ச்சியாக'மருமக்கள் வழி மான்மியம்' என்ற தலைப்பில், எழுதியவர் பெயர் இல்லாமல் பழைய ஓலைச்சுவடுகளில் கண்டு எடுக்கப்பெற்றது என்ற குறிப்புடன் வெளியிடப் பெற்றது. நாஞ்சில் நாட்டில் படித்தவர்கள் மத்தியில் அதனால் ஒரு பரபரப்பைத் தோற்றுவித்தது.*

*'மருமக்கள் வழி மான்மியம்' என்ற பெயரில் சிற்றிலக்கியம் போல் தொடர்ச்சியாக எழுதப் பட்டு வெளியாயிற்று. தமிழிலக்கியச் சுவைகளில் ஒன்றான அங்கதச் சுவையுடன் அமைத்து சமுதாயச் சீர்கேடுகளை கேலி, கிண்டல், நையாண்டி போன்றவற்றை சொல்லாடல் வழிக்காட்சிப் படுத்திக் காட்டியுள்ளார் கவிமணி.*

*அந்நூலின் நாயகன் பஞ்சகல்யாணிப்பிள்ளை அடுக்கடுக்காக ஐந்து பெண்களை மணந்தவர். குடும்பச் சொத்து தன் காலத்திற்குப் பிறகு, தான் பெற்ற பிள்ளைகளுக்குச் சேராது என்ற விரக்தி ஒரு பக்கம் இருந்தாலும் மனைவிகளுடன் சிற்றின்பத்தில் மூழ்கி உல்லாசமாக வாழ்ந்தார். கடைசியாக வந்த மனைவியை மூத்தார் அலட்சியப் படுத்தினர். அந்தப் பெண்ணின் அவல ஒலியாகத்தான் மருமக்கள் வழியின் 'மான்மியம்' அம்பலப் படுத்தப்படுகிறது. பெண்ணினத்திற்கு வந்த பெருங்கேடு என்பதை மருமக்கள் வழி என்பதைக் கடைசி மனைவியின் கண்ணீர் நமக்குச் சொல்கிறது.*

*குடும்பத்தலைவர் (காரணவர்) தனக்கு அவகாசப்பட்ட சொத்துக்களை நல்லபடியாகப் பராமரிக்காமலும் வருமானத்தைப் பாழடித்தும் வருவதைப் பார்த்த சகோதரியின் மகன் காரணவர் பால் வழக்குத் தொடுக்கின்றான். மான்மியம் சொல்வதைப் போல் நடைமுறையில் அக்கால நாட்களில் நாகர்கோவில் நீதி மன்றங்களில் இத்தகைய வழக்குகள் குவிந்திருந்தன என்பது அறியவேண்டிய செய்தி.*

*நாஞ்சில் நாட்டு இளைஞர் கூட்டமும் வேளாளர் சமுதாயத்தின் நலனில் நாட்டமுடையாரும், நாடெங்கும் ஒட்டுமொத்த மக்கள் மறுமலர்ச்சியால் முன்னேறி வரும் சூழலில் வேளாளர்கள் மருமக்கள் வழி என்ற சிக்கலில் மாட்டிக்கொண்டு மடங்கி ஒடுங்கிப் போவதைக் கண்டு கொதி நிலைக்கு ஆளாயினர்.*

*கவிஞராகவும் சிந்தனையாளராகவும் மேம்பட்டு நின்ற கவிமணி சில நூற்றாண்டுகளாக வேளாளர்களைச் செல்லரித்துக் கொண்டிருக்கும் மருமக்கள் வழி முறை சமுதாய வாழ்வியலில் இருந்து அறவே அற்றுப்போக வேண்டும் என்ற எண்ணத்துடன் களப்பணியில் ஈடுபட்டார். ஊர் ஊராகச் சென்று மக்களைக் கூட்டி மருமக்கள் வழியால் சமுதாயம் சரிவைச் சந்திப்ப தோடு மோதல் போக்கோடு துன்பத்தில் வீழ்ந்து கிடப்பதையும் புலப்படுத்தி உரை செய்தார். சிறு சிறு துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு நாஞ்சில் நாட்டார் மருமக்கள் வழியைக் கைவிட்டு தங்கள் பூர்வீகமான மக்கள் வழிக் குத் திரும்ப வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அதனைச் சட்ட பூர்வமாக நிலை நாட்ட ஒன்று பட்டு நிற்க வேண்டும் என்பதும் அவர் வேண்டுகோளாயிருந்தது.*

*ஒரு சிலரின் எதிர்ப்பையும் தாண்டி, அரசு 1926 ஆம் ஆண்டில் நாஞ்சில் நாட்டு வேளாளர்கள் இனிமேல் மருமக்கள் வழிமுறையில் அடங்காதவர்கள்; அவர்கள் மக்கள் வழியில் செயல்படலாம் என ஸ்ரீமூலம் சபையில் அரசு ஆணை ஒன்று நிறைவேற்றப்பட்டது.*

*ஒரு சமுதாயக் கூட்டம் சமுதாயச் சீர்திருத்தத்தை ஏற்குமாறு அறிவுறுத் தியும் அதனை அரசின் சட்டமாக அமையுமாறு இடைவிடாது முயன்று*

*வெற்றியும் கண்ட கவிமணியின் திறனை கண்டுணர்ந்து நாஞ்சில் நாட்டார் மகிழ்ந்தனர்.*

*இப்புதிய சட்டத்தால் வேளாளர் வாழ்வியலில் பல மாற்றங்கள் நிகழத் தொடங்கின. அப்பனும் பிள்ளைகளும் ஒருங்கிணைந்து செயல் படத்தொடங்கினர். குடும்பத்தில் பெற்ற பிள்ளைகள் அந்நியப்படுத்தப்படும் அவலம் நீங்கியது. குடும்பச் சொத்துக்களைப் பெற்ற பிள்ளைகள் ஆர்வமுடன் பராமரித்தனர்*

*இந்தப் புதிய சட்டத்தால் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம் என்ற உயர் நிலையை எய்தினர். பலதாரமணம் வெகுவாக நீங்கிப் போனது. மனைவி உயிருடன் இருக்கும் போது இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்வது ஒரு சமுதாயக் குற்றமாகக் பார்க்கப்பட்டது. சொத்துக்கள் சட்டப்படி ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த பெண்களுக்குச் சொத்து உரிமை என்ற சட்டம் பிற்காலத்தில் தமிழகத் திற்கே வழிகாட்டியது. பெண்களும் கல்வி கற்க வழி வகைகள் பிறந்தன. இப்புத்தெழுச்சிக்கு வித்திட்டும் விளைபயிராக வளரவும் அரும் பணி செய்த கவிமணியை நாமெல்லாம் நெஞ்சில் நிலை நிறுத்தவேண்டும்.*

*பழங்கால அரசர் ஆட்சி காலத்தில் அரச ஆணைகள் செப்பேடுகளில் பதிவு செய்யப்பட்டு வந்தன. அவ்வாறே பழங்கோவில்களின் கட்டுமான அடித்தளத்தில் கோயில் பற்றிய விபரங்களும் வேறு பல பொதுச்செய்தி களும் கற்களில் பதிவு செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அவைகள் தமிழ் வட்டெழுத்துக்களால் ஆனவை. அவற்றைத் தற்கால தமிழாசிரியர்களும் படித்தறிதல் ஏலாத ஒன்று. ஆனால் கவிமணி தன் நுண்மாண் நுழைபுலத்தால் படித்தறியும் ஆற்றல் பெற்றிருந்தார். அவற்றை அவர் வாயிலாகப் படித்தறிந்த சரித்திர ஆராய்ச்சியாளர்கள் பயன் பெற்றிருக் கின்றனர்; பழம் வரலாறே பொது மக்களுக்குப் புலப்படத் தொடங்கியது.*

*கல்வெட்டுக்களைப் படித்தல் சாசனங்களைப் படித்து விளக்குதல், தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை போன்ற பல்வகைத் திறத்தால் கவிஞராகவும் சரித்திர ஆய்வாளராகவும் கட்டுரையாளராகவும் பொலிவு பெற்று தமிழகம் அறிந்த பேராசனாகத் திகழ்ந்தார் நம் கவிஞர் பெருந்தகை.*

*இசைத்தமிழ் ஈடுபாட்டால் 'தேவியின் கீர்த்தனங்கள் ' என்ற இசைத்தமிழ் நூலை எழுதி இருபதாம் நூற்றாண்டின் இசைத் தமிழுக்கு அரண் சேர்த்தார். தமிழிசை வல்லோர் இசையரங்கங்களில் கவிமணியின் கீர்த்தனங்களை இன்பநாதமாய் ஒலித்துப் பாடினர்.*

*நாட்டு மக்கள் விடுதலை வேட்கை கொண்டு எழுந்த நிலையில் காந்தியடிகள் தலைமையில் ஓர் அறப்போர் இயக்கம் ஆர்த்து எழுந்தது. காந்தியடிகளின் கொள்கை வழி நின்ற கவிமணி கதர் இராட்டினப் பாட்டு, தீண்டாமை ஒழிப்பு, வட்டமேசை மாநாடு போன்றவைக் குறித்து கவி*

புனைந்து தந்துள்ளார். சாதி ஒழிப்பிலும் சமத்துவக் கோட்பாட்டிலும் கவிமணி ஈடுபாடு நிறைந்தவர் என்பதை அவர் பாடல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

விடுதலைக்குப் பின் மொழிவழியாக மாநிலங்கள் அமைய வேண்டும் என்பது மக்களின் உள்ளத்தில் ஊற்றாகப் பெருக்கெடுத்து ஓடியது . அவ்வகையில் அன்றைய திருவிதாங்கூரின் தென்பாலுள்ளத் தமிழ் வட்டங்களைத் தமிழ் நாட்டுடன் இணைத்திட வேண்டும் என்ற குரல் நாஞ்சில் நாட்டில் ஓங்கி ஒலித்தது. அந்த இயக்கத்தின் ஊதுகுழலாய்க் கவிமணி மேடைகளிலும் எழுத்துக்களிலும் எடுத்துரைத்துச் செயல் திறன் காட்டினார். தென்திருவிதாங்கூர், தமிழர் நிலம் என்பதை ஆவணங்கள் வழி மலையாளத் தலைவர்களுக்கு உணர்த்தி நின்றார். திருவிதாங்கூர் தமிழர் விடுதலைக்குப் படுக்கையில் கிடந்து கொண்டே பாடுபட்டார் நம் பாட்டனார்.

அந்நாட்களில் நடந்தேறிய எழுத்தாளர் மாநாடு, தெற்கெல்லை மீட்பு மாநாடு போன்றவற்றில் கவிமணியின் கருத்துரைகள் வெளிப்பட்டுத் தமிழகம் எங்கும் ஒலித்தன. அவர் தம் வாதத்திறனும் சொல்லாண்மையும் மேலோங்கி நின்றன.

அக்கால நாட்களில் நாடறிந்த அரசியல் தலைவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் எனப் பல்துறைப் பெருமக்கள் கவிமணியை நாடிவந்தனர். கவிமணியைக் கண்டு களிப்புறவும் உரையாடவும் பேரார்வத்துடன் நாளும் புத்தேரிக்கு வந்த வண்ணம் இருந்தனர். அவர்களில் பலரைக் காணும் நற்பேறு எனக்கு இளவயதில் வாய்த்தது. ஊராரும் கண்டு களிப்புற்றனர். புத்தேரி ஒரு புகழ் மிக்க ஊராகப் பெருமை கொண்டது

ஒருமுறை இந்தியப் பெரு நாட்டின் கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்த வரும் சென்னை மாகாணத்தின் முதலமைச்சராய் பணி செய்தவரும் அரசியல் விற்பன்னரும் புராண இதிகாசங்களில் துறை போனவருமான அறிஞர் இராசாசி நாகர்கோவில் வந்தார். அவர் கவிமணியைச் சந்திக்க ஆர்வங்கொண்டார். உடனிருந்தவர்கள் கவிமணியை இராசாசி இருக்குமிடத் திற்கு அழைத்து வர விரும்பினர். அதை ஏற்காத இராசாசி அக்கவிஞரை அவர் இருக்கும் இடத்திற்கே சென்று பார்ப்பதே மரியாதை எனக் கூறிய தோடு அமையாது புத்தேரிக்கு வந்து கவிமணியைக் கண்டு கலந்துரையாடினார். இருவரும் உளங்கலந்து உரையாடி மகிழ்ந்தனர்.

கவிமணியைக் கண்ணாரக் கண்டு கலந்துரையாடிச் சென்றோர் பலராவர். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, தே.ப.பெருமாள் உள்ளிட்ட நாஞ்சில் நாட்டின் கவிஞர்கள் பலர் வந்தனர். ம.பொ.சிவஞானம், ப.ஜீவானந்தம், மு.கருணாநிதி, மதியழகன் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் பலர் கவிமணியைக் கண்டு கருத்துரைகளைப் பரிமாறினர். கலைஞர்கள் என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம், தியாகராஜ பாகவதர்

போன்ற பல முன்னணி நடிகர்கள் கவிமணியைக் காண்பதற்கு வரவு தந்தனர். அதில் என் எஸ்.கிருஷ்ணன் நாகர்கோவில் வரும் போதெல்லாம் கவிமணி இல்லத்திற்கு வராமல் இருந்ததில்லை. டி.கே.எஸ்.சகோதரர்கள் ஔவையார் நாடகத்தை ஓர் அரங்கில் நடித்துக் காட்டியபோது கவிமணியை அன்புடன் அழைத்துச் சென்றனர். கவிமணியும் நாடகத்தைப் பார்த்து வெகுவாகப் பாராட்டினார்.

பெரும் பேராசிரியர்கள் வையாபுரிப்பிள்ளை, மு.இராகவ ஐயங்கார் போன்றோர் கவிமணியுடன் இலக்கிய நண்பர்களாய்ச் சந்தித்து வந்தனர். சொமலெ, சுந்தர ராமசாமி போன்ற எழுத்தாளர்களும் புத்தேரிக்கு வந்தனர். வித்துவான் தமிழாசிரியர் சதாசிவம் வாரம் தவறாமல் வருவார். கவிமணி பற்றிய நூலையும் அவர் எழுதினார்.

குற்றால நாதர் போன்ற பெரியவர் டி.கே.சிதம்பரநாத முதலியார் கல்கி இதழில் கவிமணியின் கவிதைகளை வியந்து எழுதினார்.

பண்டித வித்துவான் சாத்தாங்குட்டிப்பிள்ளை, வித்துவான் மு .சண்முகம் பிள்ளை, பெரும் பேராசிரியர் வ.அய்.சுப்பிரமணியம் , பேராசிரியர் வடசேரி வீரபத்திரன், தேரூர் வித்வான் உமைதாணு பிள்ளை போன்ற தமிழாய்ந்த பெரு மக்களும் வந்த வண்ணம் இருந்தனர். நீதிபதி சத்திய நேசன், நாகர்கோவில் முன்னாள் நகரசபைத் தலைவர் நயினார் போன்றவர்களிடம் கவிமணிக்கு நட்பு இருந்தது.

தெற்கெல்லை மீட்புப் போராட்டத் தொடர்பாக அந்த இயக்கத்தின் தலைவர் பலர் புத்தேரி கவிஞரின் அறிவுரைகளையும் வழிக்காட்டுதலையும் அவ்வப்போது வந்து அறிந்து செல்வர். அவர்களில் ஜனாப் என்.ஏ. நூர் முகம்மது, காந்திராமன், சட்டநாதக் கரையாளர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். அக்காலத்தில் திருச்சி வானொலி நிலையத்தார் வந்து கவிமணியைப் பேட்டி எடுத்தனர். (மேலும் வருகை தந்த பல்வேறு பெருமக்களின் பெயர்களை என்னால் நினைவு கொள்ள முடியவில்லை. பொறுத்தருள்க). சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தினர் தமிழவேள் உமா மகேஸ்வவரன் பிள்ளை என்ற தமிழறிஞரின் தலைமையில் கூடி தேசிக விநாயகம் பிள்ளைக்கு கவிமணி என்ற விருதுப் பெயரைச் சூட்டினர். அண்ணாமலையில் பல்கலைக் கழகத்தை தன் சொந்தச் செல்வத்தால் நிறு விய இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் தலைமையில் காரைக்குடியில் கூடிய கூட்டத்தில் கவிமணிக்குப் பொன்னும் பொருளும் அன்பளிப்பாகக் கொடுத்து விழா எடுத்தனர். கவிமணி தான் பெற்ற பொன்னையும் பொருளையும் திருவனந்தபுரத்தில் தமிழ்க் கல்விக்காக வழங்கி மகிழ்ந்தார்.

பொருளாதார வல்லுனராகத் துலங்கி, இந்திய நிதியமைச்சராக பணி செய்து புகழ் பெற்றவர் ஆர்.கே.சண்முகம் செட்டியார். அவர் தலைமையில் சான்றோர் பலர் ஒருங்கிணைந்து நாகர்கோவில் வந்து கவிமணிக்குப்

பெருவிழா எடுத்துப் பாராட்டினர்.

சென்னையில் 1975 ஆம் ஆண்டு பொறியாளர் நல்ல பெருமாள் தலைமையில் கவிமணி மன்றம் நிறுவப்பட்டது. அதன் செயலாளராய் பணி செய்யும் பாக்கியத்தை நான் பெற்றேன்.

சென்னைக் கவிமணி மன்றம் நாளது வரை பல கருத்தரங்கங்கள் கவியரங்கங்கள், கவிமணியின் பிறந்த நாள் விழாக்கள் , நூற்றாண்டு விழா, 125 வது ஆண்டு விழா எனப் பல விழாக்களை பேராசிரியர்கள் அமைச்சர்கள், கவிஞர்கள், தமிழாசிரியர்கள் எனப் பல் திறத்தோர் பங்கு பெறச்செய்து நடத்தியிருக்கிறது. சில விழாக்களில் கவிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளோம்.

கவிஞர், எழுத்தாளர், சரித்திர ஆராய்ச்சியாளர் தமிழிலும் ஆங்கிலத் திலும் புலமை மிக்கவர், சமுதாயச் சீர்திருத்த நோக்கமுடையவர், சாதிமத பேதமற்ற சமுதாய உருவாக்கத்தில் ஈடுபட்டவர், காந்தியடிகளின் விடுதலை இயக்கத்திற்கு தன் கவிச் சொல்லால் வலு சேர்த்தவர், தெற்கெல்லையில் மலையாள நாட்டில் மடங்கிக் கிடந்த தமிழ் நிலத்தை மீட்டெடுக்கும் பணியில் முன் நின்றவர் என்ற கவிமணியின் பல்திறன்களை இன்றைய இளைஞர்கள் அறிய மாட்டார்கள். அறிவுறுத்தல் மூத்தோர் கடன். கவிமணியின் பன்முகத் திறனை இன்றைய இளம் உள்ளங்கள் அறிதல் வேண்டும்.

இவ்வளவு பெருமையும் பெருமிதத்துக்கும் உரியவராய் கவிமணி வாழ்ந்த காலம் அவர் புத்தேரியில் வாழ்ந்த காலம். பல்துறைப் பெருமக்கள் திரண்டு வந்ததால் புத்தேரி பெருமை பெற்றது. புத்தேரியின் புகழ், அந்தப் புகழ் பூத்த கவிஞரின் புகழோடு என்றும் நிலை கொள்ள வேண்டும். அச்செயல் புத்தேரிக்கு மட்டுமன்று நாஞ்சில் நாட்டார்க்கே பெருமை சேர்ப்பது.

இன்னும் சொல்வதானால் புத்தேரியில் கவிமணியின் சிலையை நிறுவுவது பழந்தமிழர் மரபின் வழி வழி வந்த தமிழர் கடன். காலத்தில் நாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்வோம் வாரீர் !

அன்புடன்
பி. யோகீசுவரன்
சென்னை கவிமணி மன்றத்திற்காக.



*சிறுகதை*

# அடக்கடவுளே!

*திருமதி. பகவதிமோதிலால் 9446090272*



***பா**னுமதி யோகவகுப்பில் இருந்து வெளியே வந்ததும் மொபைலை எடுத்துப் ´பார்த்தாள். மகள் மஞ்சு மும்பையில் இருந்து ஐந்துமுறை கூப்பிட்டு இருக்கிறாள். அவள் அப்படித்தான் போனை எடுப்பதுவரை மீண்டும், மீண்டும் கூப்பிட்டுக் கொண்டே இருப்பாள். சரி, என்ன என்று மஞ்சுவை கூப்பிட ஸ்கூலில் ஒரு பிரச்சனை எனது கிளாஸில் உள்ள ஸ்டுடென்ட் ரஞ்சித்தின் ´அப்பா பிரதாபன் ஒரு மெயில் அனுப்பி இருக்கிறாராம். அதில் “டீச்சர் ரூடா நடக்கிறதால் தான் ஸ்டுடென்ட்ஸ் ஸ்கூலுக்கு வர பயப்படுகிறார்கள். இது கவனிக்க வேண்டியது” என்று எழுதி இருக்காம்.*

*இது கையில் கிடைத்ததும் கிளாஸ் கோ-ஆர்டினேற்றர் பார்வதி டீச்சர் எனக்கு மெம்மோ தந்து உடனே மறுபடி எழுதித்தர வேண்டும் என்று நிர்ப்பந்தமாக நின்றார்கள். நான் இந்த வருட“பெஸ்ட் பெர்பார்மிங் டீச்சர் அவார்ட் வாங்கினதில் இருந்து அவங்களுக்கு என்னைப் பிடிக்கமாட்டேங்குது. நாளைக்கு பதில் தருகிறேன் என்று சொல்லிவிட்டு புறப்பட்ட போது அவங்க பிரின்ஸிப்பாலிடம் ரிப்போர்ட் செய்துவிடுவேன். எப்பவுமே நீங்க என்னை மதிப்பது கிடையாது, இந்த வருடம் வெள்ள நிவாரண நிதி உதவிக்கு உங்க வகுப்பிலிருந்து அதிக நன்கொடை கிடைத்தது என்று பிரின்சிபால்கிட்ட நேரடியா மெயில் போட்டு இருக்கீங்க, நான் எதற்கு இங்கு இருக்கிறேன், என்னிடம் சொல்லாமல் நீங்கள் எப்படி பிரின்சிப்பாலுக்கு மெயில் போடலாம்ன்னு கோபமாக பேசினது எனக்கு ஒரே வருத்தமும், டென்ஷனுமாக இருந்ததால் தான் வீட்டுக்கு வந்ததும் கூப்பிட்டேன்” என்று விஷயத்தை சொன்னாள்*

*பானுமதி அமைதியாக “நீ டென்ஷன் ஆகாதே, நிதானமாக இரு ஸ்கூல் என்றால் இப்படித்தான், பேரன்ஸ் பல டைப்புல இருப்பாங்க, சிலர் உங்க அப்பாவை மாதிரி ரொம்ப சென்சிடிவாக இருப்பாங்க ஆக்சுவலா என்ன நடந்தது. அந்த ஸ்டூடண்ட் எப்படி, நீ அவனை அடித்தாயா, அவன் அப்பாவை உனக்கு தெரியுமா, அவருக்கு உன்னிடம் ஏதாவது கோபமா?”*

*மஞ்சு “இந்தமாசமும் க்ளாஸ்ல இவனைத் தவிர எல்லோரும் பீஸ் கட்டிட்டாங்க அதனால் அவரை இரண்டு முறை கூப்பிட்டு சொன்னபிறகு நேத்து மத்தியானம் வந்து பீஸ் கட்டிவிட்டு பையனுக்கு லஞ்சும்*

தந்துவிட்டு, ஏதோகோபம் என்று நினைக்கிறேன் ஒன்றுமே பேசாமல் உர்ன்னு போய்விட்டார் மற்றபடி ஒரு பிரச்சனையும் இல்லை, அந்த பையன் இன்றைக்கும் கிளாசுக்கு வந்திருந்தான், அவன் ஒரு ஆவரேஜ் ஸ்டுடென்ட் தான், இந்த மாச பெற்றோர்-ஆசிரியர் மீட்டிங்க்கு வந்த அவங்களுக்கு ஸ்கூல்லேயே கவுன்சிலிங் ஏற்பாடு செய்தேன் அவருக்கு அது இஷ்டமில்லாமல் தான் அட்டெண்ட் பண்ணினார். ஆனால் ரஞ்சித்துக்கு அம்மா என்கிட்ட வந்து தேங்ஸ்ன்னு சொல்லி விட்டுத்தான் போனார்கள்."

பானுமதி"எதற்கும் அப்பாவிடம் கேட்டுச் சொல்கிறேன்" என்று நாகருபிள்ளையிடம் கேட்க "அது ஒன்னும் தேவையில்லை. இரண்டு நாள் கழிச்சு இது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்று மொட்டையா, சுருக்கமா ஒரு பதில் கொடுத்தால் போதும். ஸ்கூலில் நூறு மெயில் வரத்தான் செய்யும் இந்த மெயிலுக்கெல்லாம் பயப்பட முடியுமா" என்று ஆவேசப்பட்டார். ஆவேசப்படதுக்கு அவரைவிட்டா வேறயாரு. அவர் நாகர்கோவில்காரர் ஆச்சே என்று மனதில் நினைத்துக் கொண்டு மஞ்சுவை அழைத்து

"எதற்கும் அந்த பையனின் அப்பாவிடம் பேசு ,அவர் கோபப்பட்டு பேசினாலும் அமைதியாக இனிமேல் இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன், உங்க பையன் ரொம்ப கெட்டிக்காரன், நான் தனியாக கவனித்துக் கொள்கிறேன், என்று சொல்லு. மெம்மோவுக்கு பதில் கொடுக்கும் பொழுது நீ அந்தப் ரஞ்சித்தை காம்பிட்டிசனுக்கு அனுப்பி அவனுக்கு ஒரு கன்சொலேஷன் பிரைஸ் கிடைச்சதும் அவன் பெற்றோருக்கு ஸ்கூல்லேயே கவுன்சிலிங்குக்கு ஏற்பாடு செய்தேன் என்று என்னிடம் சொன்னதையும் எழுதி, அவன் இப்போதும் வகுப்புக்கு வருகிறான் என்றும் ஹோம் வொர்க் எல்லாம் நல்லா செய்வான் என்று பணிவாக எழுது."

அடுத்த நாள் காலையிலேயே பார்வதி டீச்சர் பிரின்சிபாலைப் பார்த்து "உங்க முன்னாடி விசாரிப்பது தான் நல்லது என்று அந்த பையனின் அப்பாவையும், மஞ்சு டீச்சரையும் மதியம் ஒருமணிக்கு வரச் சொல்லியிருக்கிறேன். இந்த மாதிரி எல்லாம் நடந்தால் ஸ்கூல் பேர் கெட்டுவிடும் அல்லவா எல்லா டீச்சருக்கும் இது ஒரு குண பாடமாக இருக்கட்டும் என்று மெதுவாக பழத்தில் ஊசி ஏற்றுவது போல் மஞ்சுவுக்கு எதிராக குற்றங்களை அடுக்கிக் கொண்டிருந்த பொழுது பிரின்ஸிப்பால் போனமாதம் கூட அவங்க வருப்பிலிருந்து ரிலீப் பண்ட் கலெக்ட் செய்ததாக மெயில் போட்டிருந்தாங்க அவங்க கிளாஸில் பிசிஎம் எக்ஸாமில் ரெண்டு ஸ்டுடென்ட்சுக்கு பிரைஸ் கிடைத்தது என்று அந்த ஸ்டுடென்ட்ஸ் என்னைப் பார்க்க வந்தாங்களே".

இதைக் கேட்ட பார்வதி மனதிற்குள் ஓஹோ இது வேற நடக்குதா எப்படியாவது மஞ்சுவை ஒழித்துக் கட்டவேண்டியது தான் என

நினைத்துக் கொண்டு "அதுசரி தான் சார் ஆனா ஸ்டுடென்ட்ஸ் கிட்ட அன்பாக நடக்காம இப்படி ரூடா நடந்து ஏதாவது அசம்பாவிதம் நடந்தா நம்ம ஸ்கூல் மானமே போயிடுமே நீங்க தானே எல்லா மீட்டிங்கிலேயும் சொல்வீங்க டீச்சர்ஸ் ரோல் மாடலா இருக்கணும்னு. இந்த மாதிரி தப்பை முளையிலேயே கிள்ளணும், பர்மனென்ட் டீச்சர் ஆகப் போகிறோம். இனியாரையும் மதிக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறார்கள்" என்று மீண்டும் எதையோ சொல்ல வந்த பார்வதியிடம் பிரின்ஸிப்பால் "சரி நீங்க எல்லோரையும் கூட்டிட்டு ஒருமணிக்கு இங்கு வாருங்கள்" என்று சொல்லி விட்டு அடுத்த வேலையில் மூழ்கினார்.

மஞ்சு மறுநாள் காலையில் ஒருவித பயத்துடனும் ஸ்கூலுக்கு வந்து பார்வதி டீச்சர் முன்பு வைத்திருந்த அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டபோது " இன்றைக்கு ஒருமணிக்கு பிரின்சிபால் என்குயரி வைத்திருக்கிறார் எனக்கு உன்கிட்ட கோபம் ஒன்றும் கிடையாது என்னால் முடிந்த அளவு நான் உனக்கு உதவி செய்வேன், இருந்தாலும் ஸ்டூடன்ட்ஸ் கிட்ட ரூடா நடக்ககூடாது, கவனமாக இருக்கவேண்டும், நீங்க புரோபேஷன்ல இருக்கீங்க இந்த மாதிரி கம்ப்ளைன்ட் வந்தா வேலையே போயிடுமே சரி, கிளாசுக்கு போங்க" என்று சொன்னதும் மஞ்சுவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.
ஒரு மணிக்கு மஞ்சு டீச்சர் பிரின்சிபால் ரூமுக்கு சென்றபோது அங்கு பார்வதி டீச்சர் பிரின்சிபாலிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.

மஞ்சு"குட் ஆ.்.ப்டர்நூன் சார் என்று சொன்னதும்" பிரின்ஸிபால் தலையை உயர்த்திப் பார்த்துவிட்டு டீச்சரின் அருகில் இருக்கச் சொன்னார். பிறகு கிளாஸில் எத்தனை ஸ்டூடண்ட்ஸ், பி.டி.ஏ மீட்டிங்ல எத்தனை பேரன்ட்ஸ் வந்தார்கள் ஸ்டூடண்ட்ஸ் டயரி எல்லாம் கம்ப்ளீட் செய்தாச்சா?" என்றுகேட்டுக் கொண்டிருக்கும் பொழுதுஅறைக்கு உள்ளே வந்த பிரதாபன் பிரின்சிபலை பார்த்து வணங்கிவிட்டு பார்வதிமேடத்தைப் பார்த்து லேசாக சிரித்துக் கொண்டு காலியாக இருந்த சீட்டில் அமர்ந்தார். இதைப் பார்த்த பார்வதிக்கு மனதில் ஒரே சந்தோசம். இந்த முறை சரியாக தீட்டிவிட வேண்டும். இந்த சான்சை விட்டா வேற சான்சே கெடைக்காது. பிரின்சிபால் வேற மஞ்சு மட்டும்தான் நிவாரணநிதி கலெக்ட் பண்ணுவா, இங்கிலீஷ்ல நல்லா பேசுவா, காம்படிஷன் நடத்துவா, கிரீன் தீபாவளி நடத்துவாள் என்று ரொம்ப இடம் கொடுக்கிறார்.மனதில் நினைத்துக் கொண்டே பிரதாபனைப் பார்த்து.

"டீச்சர் ஸ்டுடென்ட் கிட்ட ர.்.ப்பா நடப்பதை பார்த்தீர்களா அல்லது பையன் வந்து சொன்னானா?"
அதற்கு பிரதாபன் "நான் பார்த்தேன் அது தான் எழுதினேன் இப்படி குழந்தையை டிரிட் செய்வது ரொம்ப தப்பு. அதனால குழந்தைக்கு டிப்ரஷன்தான் வரும்" என்றார்.

பார்வதி பிரின்சிபாலை பார்த்துக் கொண்டே" இதற்கு முன்பு இப்படி

*நடந்து இருக்கா அப்படி நடந்ததாக என்னிடம் சொல்லியிருந்தால் நான் திருத்தியருப்பேனே" என்று மஞ்சுவுக்காக வக்காலத்து வாங்குவது போல் எரிகிற தீயில் நெய்யை விட்டு பெரிதாக்க முயன்றாள். மஞ்சுவை பார்த்து" நீங்க கொஞ்சம் கவனமாக இருந்திருக்கலாம் நீங்கள் ஸ்கூலில் நிறைய எக்ஸ்ட்ரா கரிக்குலர் ஆக்டிவிடீஸ் செய்யுறீங்க ஆனா குழந்தையை அடிப்பது ரொம்ப தப்பு நம்ம அன்பாக அல்லவா நடத்தணும் அடுத்த மாசம் உங்க புரோபேஷன் முடியப் போகுது இந்த சமயத்தில் பனிஷ்மென்ட் கிடைச்சா அது உங்களை பாதிக்குமே"*

*இதைக் கேட்ட பிரதாப் "நான் எப்பொழுது மஞ்சு மேடத்தை பற்றி கம்ப்ளைன்ட் செய்தேன். அவங்க என்னை கூப்பிட்டு பீஸ் கட்டவில்லை என்று சொல்வாங்க பல பிரச்சனை அதனால் எல்லா மாதமும் லேட்டாகத்தான் பீஸ் கட்ட முடிகிறது. இந்த மாசமும் நான் லேட்டாகத்தான் பீஸ் கட்டினேன். அதற்காக வந்த போதுதான் அந்த சம்பவத்தை பார்த்ததால் மெயில் போட்டேன் என்றார்.*

*இதுவரை அமைதியாக இருந்த பிரின்சிபல் "பிரதாபன் என்ன நடந்தது?" என்று கேட்டார்."நேற்று நான் பீஸ் கட்டுவதற்காக ஸ்கூலுக்கு வந்து விட்டு திரும்ப போகும் போது மூன்றாம் வகுப்பில் உள்ள ஜீனத் டீச்சர் குழந்தையின் தலைமுடியை பிடித்து உருட்டி கத்திப் பேசுவதை பார்த்தேன். அந்த குழந்தையின் கண்ணீரை பார்த்ததும் எனக்கு ரொம்ப வருத்தமாக போய்விட்டது. அதுதான் அந்த மெயிலை போட்டேன். இங்கு வந்த பிறகு நான் டீச்சர் என்று எழுதியதை பார்வதி மேடம் அது மஞ்சு டீச்சர் என்று நினைத்து அவங்களை இந்த அளவுக்கு டார்ச்சர் செய்வாங்க என்று நினைக்கவே இல்லை. இது தெரிந்திருந்தால் இந்த மெயிலை போட்டிருக்கவே மாட்டேன். மஞ்சு மேடம் என்னை கூப்பிட்டு பீஸ் கட்டவில்லை என்று சொல்வதுண்டு அதில் எனக்கு வருத்தம் ஒன்றும் இல்லை. என் பையனுக்கும் மஞ்சு மேடத்தை ரொம்ப பிடிக்கும். இவங்க கிளாஸ்ல மட்டும்தான் நாங்க இருபதுக்கும் மேல் பேரன்ஸ் மீட்டிங்க்கு வந்து இருந்தோம். எங்களுக்கு ஒரு கவுன்சிலிங் கூட வைத்தாங்க, என் மனைவிக்கும் ரொம்ப பிடிக்கும் என்னுடைய மெயில் மஞ்சு மேடத்துக்கு ஏதாவது கஷ்டத்தை தந்திருந்தா என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்ல அந்த அறை நிசப்தமானது!.*



# இந்திய சுதந்திரப் போராட்டத்தில் "காமா அம்மையார்"

(தொகுப்பு: ஜெய்ஹிந்த் செண்பகராமனின் பேரன் பொ.சேதுசேஷன்)








**டாக்டர் வியகாஸ் அவர்களின் திருவுருவச் சிலையின் படம்.**

*(டாக்டர் வியகாஸ், பம்பாயில் கொடிய நோயான 'பிளேக்' தாக்கிய போது மக்களுக்கு ஆற்றிய பணிக்காக, அவரைக் கௌரவிக்கும் விதமாக பம்பாயில் பிரபல 'கௌஸாஜி பிரேம்ஜி' ஹாலுக்கும் ( Cowsaji Premji Hall) மக்கள் நெருக்கமாகப் புழங்கும் 'பதக் வாடி' ( Pathak Wadi) பகுதிக்கும் நடுவில் 1936 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 31 ஆம் தேதிஅவரது உருவச்சிலை நிறுவப்பட்டது)*

இவ்வாறு நமது காமா அம்மையார், அந்த ஐந்தாண்டு காலம் அந்த கொடிய பிளேக் நோயை எதிர்த்து, அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆற்றிய தொண்டு மட்டுமல்லாமல், அந்த நோய் மற்றவர்களுக்குப் பரவாமல் தடுக்க, அவர்களைப் பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் சென்று குடியமர்த்தி, தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப் பட்டவுடன், அவர்களுக்குத் தடுப்பூசி போடுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து வந்தார். மேலும் அன்றைய காலகட்டத்தில் சிறந்து விளங்கிய ' பம்பாய் கிராண்ட் மருத்துவக் கல்லூரி ( Bambay Grand Medical College) மாணவ மாணவிகளுடன் , இரவு பகல் பாராமல் பம்பாய் பகுதி முழுவதும் அவர் ஆற்றிய பணி அளவிட முடியாதது.

பம்பாயைத் தாக்கிய பிளேக் நோயைப் பற்றி எழுதும் போது, டாக்டர் W.M. ஹாப்கின் பற்றி எழுதாமல் விட்டால் அந்தச் செய்தி முழுமை பெறாது. டாக்டர் ஹாப்கின், ரஷ்யாவில் பிறந்த ஒரு யூத இனத்தவர் (Jewish Community). அவர் விலங்கியல்( Zoology) பட்டம் பெற்று , விலங்குகள் மூலம் மக்களுக்குப் பரவும் நோய்கள் பற்றிய ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெற்று, பாரீஸ் நகரில் 1889 ஆம் ஆண்டு ஒரு மருத்துவப் பரிசோதனைக் கூடம் ஒன்றை ஆரம்பித்தார். அப்போது (Pasteur's Laboratory) உலகை உலுக்கிக் கொண்டிருந்த காலரா நோய்க்கான தடுப்பூசி மருந்தைக் கண்டு பிடித்தார். 1893 ஆம் ஆண்டு கல்கத்தா பகுதியை காலரா தாக்கியிருந்த

*போது , இவர் ஆங்கில அரசால் அழைக்கப்பட்டார். அங்கு தன்னுடைய கண்டுபிடிப்பான காலரா தடுப்பு மருந்தை ஊசி மூலம் செலுத்தி , மக்கள் பலரை காலரா நோயிலிருந்து காப்பாற்றினார்.*

*இது சம்பந்தமாக மூன்று ஆண்டுகள் கல்கத்தாவில் சிறப்பாகப் பணியாற்றி வந்த டாக்டர் W.M. ஹாப்கின் பற்றி அறிந்த நமது காமா அம்மையார், பம்பாயைத் தாக்கியுள்ள கொடிய பிளேக் நோய்க்கான தடுப்பு மருந்தை இவர் ஒருவரால் மட்டுமே கண்டுபிடிக்க முடியும் என்று உணர்ந்தார். அதன்படி, தனது மாமனார் மற்றும் டாக்டர் வியகாஸ் உத வியுடன் பம்பாய் ஆளுநர் 'பிரபு ஸான்தர்ஸ்ட்' (Lord Sandhurst) அவர்களை அணுகி, கல்கத்தாவில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்த டாக்டர் W.M. ஹாப்கினை உடனே அழைத்து வர ஏற்பாடு செய்யக் கேட்டுக் கொண்டார். ஆளுநரும் பம்பாயில் பிளேக் நோயின் கொடூரத்தை உணர்ந்து, கவர்னர் ஜெனரல் எல்ஜின் பிரபுவிடம் ( Lord Elgin) டாக்டர் W.M. ஹாப் கினை கல்கத்தாவில் இருந்து பம்பாய் நகருக்கு மாற்றும்படி வேண்டிக் கொள்ள, டாக்டர் W.M. ஹாப்கின் பம்பாய் வந்து சேர்ந்தார்.*

*பிளேக் நோய் பம்பாயில் அறிவிக்கப் பட்ட அந்த ஆண்டே, டாக்டர் வியகாஸ் உதவியால் பம்பாய் ஜே.ஜே. மருத்துவமனை பிளேக் நோய் ஆய்வு செய்வதற்காகவே அமைக்கப்பட்டது. டாக்டர் W.M. ஹாப்கின் பம்பாய் வந்ததும், அந்த பரிசோதனைக் கூடம் அவரது அறிவுரையின் படி, பரேல் பகுதியில் இயங்கி வந்த அரசு மருத்துவ மனைக்கு, 1889 ஆம் ஆண்டு மற்றப் பட்டது.*

*அந்தப் பரிசோதனைக் கூடத்தில் டாக்டர் W.M. ஹாப்கின் இரவு பகலாக ஆராய்ச்சி பல செய்து பிளேக் தடுப்பு ஊசி மருந்து ஒன்றைக் கண்டுபிடித்தார். பின்னர் அந்தத் தடுப்பு ஊசி மருந்தினை மக்களுக்கு செலுத்து முன் , துணிந்து பரிசோதனைக்கு ஏற்றுக்கொள்ள யாரும் முன் வரவில்லை. அப்போது நமது காமா அம்மையார், பம்பாய் பைகுல்லா சிறையில் சிறு குற்றங்களுக்காக, குறுகிய காலத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளை அணுகி, அவர்களை இந்தப் பரிசோதனைக்குத் தங்களை அர்பணித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். காமா அம்மையாரின் வேண்டுகோளுக்கு இணங்கி அவர்களும் இந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொண்டனர். அதன் பிறகு ஒரு*



*வாரத்திற்கு மேல் சிறையில் இருந்த பிளேக் நோய் பாதிக்கப் பட்ட கைதிகளோடு பழகியும், பிளேக் நோய் அவர்களைத் தாக்காத செய்தி டாக்டர் W.M. ஹாப்கின் அவர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்தது. மேலும் அவர் காமா அம்மையாருக்கு நன்றி கூறியதோடு, இந்தப் பரிசோதனைகளில்*

ஒத்துழைப்பு அளித்த கைதிகளை உடனே விடுவிக்குமாறு ஆங்கிலேய அரசுக்குப் பரிந்துரை செய்து, அவர்களின் விடுதலைக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். விடுதலையான கைதிகள்,டாக்டர் W.M. ஹாப்கின் மற்றும் காமா அம்மையாருக்கு நன்றி செலுத்தி, பிளேக் நோய் தடுப்பு முகாம்களில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

